
# நற்செய்தி கதைப் புத்தகம் இரண்டு




இது என்னுடைய நற்செய்தி கதைப் புத்தகம் இரண்டு

என் பெயர்


______________________________

நான் என்னுடைய நற்செய்தி கதைப் புத்தகம்

இரண்டை வாசிக்க முடியும்

இக்கதைகள் சிருஷ்டிகரான தேவனுடைய
வேத புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளன.

இக்கதைப் புத்தகத்தின் படங்களை வரைந்தவர்கள்
இந்தியாவின் ஆதிவாசிக் குழந்தைகள்.
நற்செய்தி கதைப் புத்தகம் இரண்டு. கருத்து உரிமை 2013
இந்தியாவில் அச்சிடப்பட்டது. மேலும் விபரங்களுக்கு:
WBTC India, P.O. Box 8478, Bangalore 560084. info@wbtcindia.com





மிக மிகப் பெரிய புயல்.................2-15
சிறந்த பரிசு...............................16-32

# மிக மிகப் பெரிய புயல்


நம் முன்னோர்களின் காலத்தில்...

அநேக மக்களை என்னால்
பார்க்க முடிகிறது.

அநேக மக்கள் சிருஷ்டிகரான
தேவனை அறியவில்லை.







ஒரு மனுஷனை என்னால்
பார்க்க முடிகிறது.

அவன் பெயர் நோவா.

நோவா சிருஷ்டிகரான
தேவனைப் பாடுகிறான்.

சிருஷ்டிகரான தேவன் பேசுவதை
என்னால் கேட்க முடிகிறது,
‘நோவா, ஒரு மிக மிகப் பெரிய
படகைக் கட்டு.

சீக்கிரம், பெரிய புயல் வருகிறது.







உன்னையும், உன் குடும்பம்
மற்றும் எல்லா மிருகங்களையும்
நான் காப்பாற்றுவேன்.

சீக்கிரம், பெரிய புயல் வருகிறது.’

நோவா படகைக் கட்டுவதை
என்னால் பார்க்க முடிகிறது.

சீக்கிரம், பெரிய புயல் வருகிறது.








சிருஷ்டிகரான தேவன் பேசுவதை
என்னால் கேட்க முடிகிறது,
‘நோவா, நீயும் உன் குடும்பமும்
எல்லா மிருகங்களும் மிக மிகப்
பெரிய படகுக்குள் செல்லுங்கள்.


சீக்கிரம், பெரிய புயல் வருகிறது.’



நோவா, அவன் குடும்பம்
மற்றும் எல்லா மிருகங்களும்
மிக மிகப் பெரிய படகிற்குள்
செல்வதை என்னால்
பார்க்க முடிகிறது.









நீர் உயர...உயர...உயர வருகிறது.

நிலமெங்கும் வெள்ளம்...
வெள்ளம்...வெள்ளம்.

மிக மிகப் பெரிய படகினுள்
நோவா, அவன் குடும்பம்
மற்றும் எல்லா மிருகங்களும்
ஓய்வெடுகின்றனர்...
ஓய்வெடுகின்றனர்...
ஓய்வெடுகின்றனர்.







பெரும் புயல் நிற்கிறது...
நிற்கிறது...நிற்கிறது.


நீர் கீழே...கீழே...கீழே சென்று
கொண்டிருக்கிறது.



சிருஷ்டிகரான தேவன் பேசுவதை
என்னால் கேட்க முடிகிறது,
‘நோவா, நீயும், உன் குடும்பமும்
மற்றும் எல்லா மிருகங்களும்
மிக மிகப் பெரிய படகிலிருந்து
வெளியேறுங்கள்.’







நோவா, அவன் குடும்பம்
மற்றும் எல்லா மிருகங்களும்
மிக மிகப் பெரிய படகிலிருந்து
வெளி வருகின்றதை என்னால்
பார்க்க முடிகிறது.

வானத்தில் ஒரு
வர்ணப்பட்டையை என்னால்
பார்க்க முடிகிறது, ஒளிவீசுகிறது...
ஒளிவீசுகிறது...ஒளிவீசுகிறது.





சிருஷ்டிகரான தேவன் பேசுவதை
என்னால் கேட்க முடிகிறது,
‘நான் உங்களை மீட்பேன். நீங்கள்
என்னைக் கண்டுகொள்வீர்கள்.’

சிருஷ்டிகரான தேவன் வருகிறார்.

# சிறந்த பரிசு

அநேக வருடங்கள் கழிந்தன...

ஒரு மனுஷனை என்னால்
பார்க்க முடிகிறது.

அவர் பெயர் ஆபிரகாம்.





சிருஷ்டிகரான தேவன்
பேசுவதை என்னால்
கேட்க முடிகிறது,

‘ஆபிரகாமே, உன்
குழந்தைகள் மூலம், நான்
அநேக மக்களை மீட்பேன்.’


ஆபிரகாமின் மனைவியை
என்னால் பார்க்க முடிகிறது.

அவள் பெயர் சாரா.

ஆபிரகாமுக்கும் சாராவுக்கும்
பிள்ளைகள் இல்லை.







ஆபிரகாம் கூறுவதை
என்னால் கேட்க முடிகிறது,

‘சிருஷ்டிகரான தேவனால்
எதையும் செய்ய முடியும்.’

சாரா மறக்கிறாள்...
மறக்கிறாள்...மறக்கிறாள்.

ஆபிரகாம் சொல்கிறார்,

‘சிருஷ்டிகரான தேவனால்
எதையும் செய்ய முடியும்.’







அநேக வருடங்கள் கழிந்தன.

சிருஷ்டிகரான தேவனால்
எதையும் செய்ய முடியும்.

ஆபிரகாமையும் அவர்
மனைவியையும் என்னால்
பார்க்க முடிகிறது.

அவர்களுக்கு ஒரு மகன்
பிறக்கிறான்.

அவன் பெயர் ஈசாக்கு.

ஆபிரகாம், சாரா மற்றும் ஈசாக்கு
பாடுகிறார்கள்...பாடுகிறார்கள்...
பாடுகிறார்கள்.








சிருஷ்டிகரான தேவன்
பேசுவதை என்னால்
கேட்க முடிகிறது,


‘ஆபிரகாமே, உன் மகன்
ஈசாக்கை எனக்கு பலியிடு.’

ஆபிரகாம் தன் மகன்
ஈசாக்கை நேசித்தார்.

ஈசாக்கு தன் தகப்பன்
ஆபிரகாமை நேசித்தான்.





இருவரும் மலையின் மேல்...
மேல்...மேல் ஏறுகிறார்கள்.

ஈசாக்கு சொல்வதை என்னால் கேட்க முடிகிறது.

‘அப்பா, சிருஷ்டிகரான தேவனுக்கு பலியிட ஆட்டுக்குட்டி எங்கே?’







ஆபிரகாம் கூறுவதை என்னால் கேட்க முடிகிறது,

‘சிருஷ்டிகரான தேவன் பலியிட ஆட்டுக்குட்டியைத் தருவார்.’

ஆபிரகாம் சொல்கிறார்,

‘சிருஷ்டிகரான தேவனால் எதையும் செய்ய முடியும்.’








ஈசாக்கு பலிபீடத்தில் ஏறுவதை என்னால் பார்க்க முடிகிறது.

ஆபிரகாம் கத்தியை ஓங்குகிறதை என்னால் பார்க்க முடிகிறது.



ஆபிரகாம் சொல்கிறார்,

‘சிருஷ்டிகரான
தேவனால்
எதையும்
செய்ய முடியும்.’









சிருஷ்டிகரான தேவன்
பேசுவதை என்னால்
கேட்க முடிகிறது,

‘ஆபிரகாமே, நிறுத்து!

ஈசாக்கு வாழ்வதை நான்
விரும்புகிறேன்!

நான் கொடுக்கும்
ஆட்டுக்குட்டியை பலியிடு.’

சிருஷ்டிகரான தேவன் பேசுவதை
என்னால் கேட்க முடிகிறது,

‘ஆபிரகாமே உன் குழந்தைகள்
மூலம், நான் அநேக மக்களை
மீட்பேன்.’

சிருஷ்டிகரான தேவன் வருகிறார்.

